Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 4



# INDEX


| | |
|---|---|
| ABSENT MINDED | 1-7 |
| ADVICE | 8-15 |
| STRANGE DISEASE | 16-23 |
| ALL ROUNDER | 24-32 |
| ANULOM-VILOM | 33-43 |
| ASTROLOGER | 44-53 |


மறதியுள்ளவன்


ஒரு ஆள் திரு. ரோல்ஸ் அலுவலகத்திற்கு வந்தான்.
ஐயா, எனக்கு தயவு செய்து 10 தங்க காசுகள் கடன் கொடுப்பீர்களா.
நான் நிச்சயமாக கொடுக்கிறேன், ஆனால், நீ ஒரு மாதத்திற்குள் திருப்பி கொடுத்து விடவெண்டும்.
அப்படி என்றால், இது கஷ்டம் தான், அத்தனை நீண்ட நாட்களுக்கு நான் கடன் கொடுக்க இயலாது.
ஆனால் ஐயா, திருப்பிக் கொடுக்க எனக்கு ஒரு வருடம் பிடிக்கும்.


ஆனால், நீ எட்வார்ட் சகோதரர்களிடமிருந்து பெறலாம்.
ஓ , ஐயா, யார் அவர்கள் ?
இவர்கள் இருவரும் இரட்டை சகோதரர்கள், அவர்களை அடையாளம் கண்டு கொள்வது கஷ்டம்.


அவர்களில் பெரியவன்,
மறதியுள்ளவன்
அதே நேரத்தில்,
சின்னவன்,
ஞாபகமுள்ளவன்.
காலை வணக்கம் ஐயா !
இது உங்கள் அண்ணன் வீடா ?
தயவு செய்து
அமருங்கள், நான்
அவரை அழைக்கிறேன்.


என்னைத்தேடுவதாக கேள்விப்பட்டேன், என்ன வேலை, சொல்லுங்கள்.
ஐயா, எனக்கு கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது. அதற்காக நான் திரு. ரோல்ஸை சந்தித்தேன், அவர் உங்கள் உதவியை நாட அனுப்பி வைத்தார்.
ஓ, நிச்சயமாக நான் உதவ முடியும், கடனை எப்பொழுது திருப்பிக்கொடுப்பீர்கள்.


ஒஹ்! இவன் எப்படியும் மறதியுள்ளவன், நான் குறுகிய கால அவகாசம் கேட்கிறேன்.
ஐயா, நான் ஒரு வாரத்திற்குள் திருப்பி தந்து விடுகிறேன்.
இரண்டு வாரம் கழித்து ...
உங்கள் வாக்குறுதி போல் நீங்கள் கடனை திருப்பி தரவில்லை, ஆகவே நான் இங்கே வந்திருக்கிறேன்.
ஒஹ், நான் வருந்துகிறேன், நான் முற்றிலும் மறந்து விட்டேன். நீங்கள் மறதியுள்ளவர் என நான் கேள்விப்பட்டேன், ஆனால் உங்கள் ஞாபக சக்தி என்னைவிட கூர்மையாக உள்ளதே.


மறதியுள்ளவன் நான் அல்ல , என் சகோதரன் தான் அப்படி.
ஒஹ், அன்று நான் அவரை சந்தித்தேன், பெரியவரை பார்க்க வேண்டும் என கூறினேன், அவர் எப்படி உங்களை அனுப்பி வைத்தார் ?
ஓஹ், அப்படியா ? என் சகோதரர் மறதியுள்ளவர், சில நேரம், அவர் தான் பெரியவர் என்பதை மறந்து விடுவார்.
எல்லாப்பிரச்சனைக்கும் வருந்துகிறேன் ஐயா, தயவு செய்துமன்னித்து விடுங்கள், கடனை திருப்பி கொடுக்க இன்னும் சிறிது அவகாசம் கொடுங்கள்.
சரி.... ஆனால் நான் மறதியுள்ளவன் அல்ல, ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்..... குறித்த காலத்தில் பணம் திருப்பி தர வில்லை என்றால் நான் விடமாடேன்..
முற்றும்.


அறிவுரை


நாஷி என்ற கிராமத்தில் இஸ்ஸான் வில்லோ என்ற மூத்த மருத்துவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு அனுபவமுள்ள மருத்துவர்.
ஒரு நாள் மாரியன் என்ற ஒரு இளம் பையன் வேலை தேடி மருத்துவர் வீட்டிற்கு வந்தான்.
மாரியன், நீ என்ன படித்திருக்கிறாய்?
ஐயா, நான் படிக்காதவன், நான் வீட்டு வேலை செய்வேன், மருந்தகத்தையும் கவனித்து க்கொள்கிறேன்.
மாரியன் நேர்மையுடன் மருத்துவரிடம் வேலை பார்த்து, மருந்தகத்தையும் கவனித்து வந்தான்.



சில மாதங்களுக்குப்பின், மாரியன் மருந்துகளிலும், நோயாளி களிலும் ஆர்வம் காட்டினான்.
மாரியன், நாளையிலிருந்து, நான் சொன்னபடி, நோயாளிகளுக்கு மருந்து கொடு.
சரி, ஐயா.
இவன் படிக்காதவனாக இருந்தாலும், உழைப்பாளியாகவும், புத்திசாலியாகவும் இருக்கிறான். இவனுக்கு மருத்துவத்தில் பயிற்சி அளிக்க வேண்டும்.
மாரியன் நோயாளிகளை பார்த்து அவர்களுக்கு மருந்தும் பரிந்துரைக்க ஆரம்பித்தான்.
மருத்துவர் அவனுக்கு பல நோய் களைப்பற்றியும், அவைகளை குணப்படுத்தும் முறைகள் பற்றியும் கற்பித்தார். அவர் போகும் இடமெல்லாம் அவனையும் அழைத்து சென்றார்.



சில வருடங்களில் மாரியன் மருத்துவத்தில் தேர்ச்சி பெற்று நிபுணன் ஆனான்.
ஒரு நாள்..
ஐயா, என்னை கற்பித்ததற்கு மிக்க நன்றி, தயவு செய்து என் ஊருக்கு போய் அங்கே மருத்துவனாக பயிற்சி செய்ய அனுமதி தாருங்கள்.
மாரியன், உன் தொழிலில் நேர்மையாக இரு, நீ மக்களுடைய வாழ்க்கையுடன் உடன்படுகிறாய். என் வாழ்த்துக்கள் மகனே.
மாரியன் தன் ஊர் கோமோஷியில் மருத்துவ பயிற்சி ஆரம்பித்து, குறைந்த காலத்தில் தன் கிராமத்தில் புகழ் பெறுகிறான்.



நன்றி ஐயா, நீங்கள் என் மகனின் உயிரை காத்தீர்கள்.
மக்கள் அவனுடைய மருத்துவ பயிற்சியை நம்பினர்.
அதே கிராமத்தில் ஸ்டான் ஹில் என்ற இன்னொரு மருத்துவர் மாரியனுடன் கடும் போட்டிக்கு ஆளாகியிருந்தார்.
மக்கள் மாரியனுடைய சிகிச்சையில் கொண்டிருந்த நம்பிக்கையுடன், ஸ்டான் ஹில் மருத்துவரை விட மாரியன் குறைவாகவே பணம் வாங்கி வந்தான்
ஒரு நாள் மாரியன் சான்றிதழ் இல்லாத மருத்துவன் என்று ஸ்டான் ஹில்லுக்கு தெரிய வந்தது....
ஓ...அவன் படிப்பறிவு இல்லாதவன்; சான்றிதல் பெற்ற மருத்துவன் இல்லை. பிறகு எப்படி அவன் மருத்துவம் பார்க்கலாம்...


ஸ்டான் ஹில் கிரமத்து மக்களை அழைத்து...
மாரியன் ஒரு சான்றிதழ் பெற்ற மருத்துவன் அல்ல. அவனை நம்பாதீர்கள், உங்கள் வாழ்க்கை ஆபத்தில் விழுந்து விடும்.
ஸ்டான் ஹில் எச்சரித்த போதிலும், மக்கள் மாரியனிடம் சிகிச்சைக்கு சென்றனர்.
இம்மக்கள் முட்டாள்கள்.
ஒரு நாள் ஸ்டான் ஹில் இஸ்ஸான் வில்லோ உடைய கிராமத்திற்கு சென்றான்.
ஐயா, நீங்கள் ஒரு மூத்த மருத்துவர், சான்றிதழ் இல்லாத மாரியனை மருத்துவ பயிற்சிக்கு எப்படி அனுமதி அளித்தீர்கள்


ஒரு சில குறிப்பு கள் மட்டும் தெரிந்து கொண்டு யாரும் மருத்துவராக முடியாது தானே, மருத்துவர் ஐயா?
ஆமாம். மக்கள் சில குறிப்புகள் தெரிந்து கொண்டு மருத்துவம் பயில முடியும் என்றால், ஒவ்வொருவரும் மருத்துவராகலாமே.
இஸ்ஸன் வில்லோ, ஸ்டான் ஹில் உடைய பொறாமையையும், மாரியன் மருத்துவ வல்லமையால் மருத்துவ தொழிலில் வெற்றியுடன் செயல்படுவதையும் புரிந்து கொண்டார்.
இவனுக்கு பாடம் புகட்ட வேண்டும்.
ஸ்டான் ஹில், தயவு செய்து இந்த புத்தகத்தை இன்றிரவு படியுங்கள். நாளை எனக்கு நீங்கள் ஓர் சட்டி செய்து தர வேண்டும்.


ஒரு மண் சட்டியா? நான் எப்படி செய்ய முடியும், நான் ஒரு குயவன் அல்ல.
ஆனால், மெத்தப் படித்திருக்கும் நீங்கள் இதையும் படித்து, கற்று, செய்யலாம் இல்லையா?
நான் இதை படித்தாலும், பயிற்சி எனக்கில்லை.
ஆமாம், இது தான் விஷயமே, பயிற்சி ஒருவனை பூரணமாக்கிவிடுகிறது, ஸ்டான்.
ஸ்டான் நீங்கள் மாரியன் மீது பொறாமை கொள்ளத் தேவையில்லை. மாரியன் இயற்கையாகவே மிகவும் நேர்மை வாய்ந்தவன், உழைப்பாளி. அவனுடைய கடுமையான பயிற்சிக்குப் பின் தான் நிறைய மருத்துவ அறிவு பெற்றிருக்கிறான்.
ஸ்டான் ஹில்ல் தன் தவறை உணர்ந்து இஸ்ஸன் வில்லோ விடம் மன்னிப்பு கேட்டான். வேறு கிராமத்திற்கு சென்று தன் மருத்துவ பயிற்சியை மேற்கொண்டான்.
முற்றும்


விசித்திர வியாதி


வெகு நாள் முன்பு, தென் ஆப்பிரிக்காவின் காங்கோ பிரதேசத்தில் அபாபுவா என்ற ஒரு பழங்குடி வாழ்ந்து வந்தது. அரசன் பாப்வா அதனுடைய தலைவனாக இருந்தான்.
அரசன் பாப்வா எப்பொழுதும் முரண்பாடான சட்டத்தை பிரகடனம் செய்து, ஏற்றுக்கொள்ள மறுப்பவரின் தலைகளை வெட்டி வந்தான்.
மக்கள் அவனை வெளிப்படையாக எதிர்க்க பயப்பட்டனர்
ஒரு நாள் அரசன் பாப்வா தன் மந்திரி களுடன் வேட்டைக்கு சவாரியில் போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது சில பேர் ஒரு மரத்தடியில் விளையாடிக்கொண்டிருந்ததை கண்டான்.
போய் யார் என்று பார்த்து வாருங்கள்.


மாண்புமிகு மன்னரே, அவர்கள் விவசாயிகள். இப்பொழுது வயலில் வேலை ஏதும் இல்லாததால் பொழுதை போக்க விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள்.
இப்படிப்பட்ட சோம்பேறிகள் என் ராஜ்ஜியத்தில் இருப்பதை அறிந்த நீ எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை ?
மந்திரியாரே, வேலை செய்யாதவர்களின் பட்டியல் எனக்குத்தேவை.
மந்திரி ஓர் பட்டியலை தயார் செய்தார். அதில் கர்ப்பிணிப்பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் நோயாளிகளின் பெயர்கள் இடம் பெற்று இருந்தன.


அரசன் பாப்வா நீண்ட பட்டியலில் நிறைய பெயர்கள் கண்டு சீற்றம் அடைந்தான்.
இன்று முதல் அனைவரும் வேலை செய்ய வேண்டும். குருடர் களுக்கும், முடவர்களுக்கும், தன் கையினால் செய்யக்கூடிய வேலை தரப்பட வேண்டும்.
கர்ப்பிணிகளும், முதியவர் களும் அமர்ந்து வேலை செய்ய வேண்டும். நோயாளிகளுக்கு அவர்கள் இடத்திலேயே வேலை கொடுங்கள், அங்கே அவர்கள் இளைப்பாறி வேலையை முடிக்கட்டும்.
கோடைக் காலத்தில் வேலை இல்லாத விவசாயிகளுக்கு சாலை சுத்தம் செய்யும் வேலை கொடுங்கள்
மாண்புமிகு அரசரே, நம் சிப்பாய்கள் சாலை போட்டு, கிணறுகளை தோண்டுகிறார்கள். விவசாயிகள், கோடையில் ஓய்வு எடுக்க விரும்புகிறார்கள்.
எல்லா விவசாயிகளும் வேலையிலிருந்து தப்பிக்க ஏதாவது சாக்கு சொல்வார்கள். வேலை இல்லை என்றால், புதிய கிணறுகளை தோண்ட சொல்லுங்கள்.


சிப்பாய்களுக்கு வேலை இல்லையெனில், அவர்களை போருக்கு அனுப்புங்கள். சோம்பேறித்தனத்தை நான் அறவே வெறுக்கிறேன். இதை உடனே பிரகடனப்படுத்துங்கள். யாராவது சோம்பேறியாக காணப்பட்டால், அவன் தலை வெட்டப்படும்.
அன்று முதல், சிப்பாய்கள் பெண்களையும், முதியவர்களையும், சிறுவர்களையும், விவசாயிகளையும் தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டனர். பலவந்தமாக அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட்டது.
ஒரு நாள், ஒரு முதியவர் மரத்தடியில் அமர்ந்திருந்தார். அவர் கால்களில் கொப்புளங்கள் இருந்ததால் அவரால் நகர முடியவில்லை.
ஓய் சோம்பேறி நீ ஏன் வேலை செய்யாமலிருக்கிறாய் ? நீ சும்மா இருக்க அனுமதி கிடையாது, போய், வயலில் ஏர் ஓட்டு.


ஆமாம், நான் சோம்பேறி தான், இந்த வயலை உழ மாட்டேன். போய் இதைப்பற்றி உங்கள் அரசனிடம் கூறுங்கள்.
சிப்பாய்கள் முதியவரைப்பற்றி அரசனிடம் முறையிட்டனர்.
அவன் தலையை வெட்டுங்கள்.
அரசர் பாப்வா உன் தலையை வெட்ட கட்டளையிட்டுள்ளார். உனக்கு ஏதாவது கடைசி ஆசை உண்டா ?
ஒரு தடவை அரசனை நான் சந்திக்க வேண்டும்.
சிப்பாய்கள் முதியவரை அரசனிடம் கொண்டு சென்றனர்.
நீ சோம்பேறியாகி விட்டதாகவும், வேலை செய்ய மறுப்பதாகவும்நான் கேள்விப்பட்டேன்.
மாண்புமிகு அரசரே, வேலை தான் என் மதமே அதை நான் போதிக்கிறேன். விவசாயிகளின் வேலை வயலை உழுவது, அதை நான் தகுந்த நேரத்தில் செய்து வருகிறேன். கர்ப்பிணிகள் ஓய்வெடுத்தாக வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் வேலையை செய்து வருகிறார்கள்.


உன் வாயை மூடு! வேலையிலிருந்து தப்பிக்க நீ சாக்கு தேடுகிறாய், அப்படிப்பட்ட யாரும் என் ராஜ்ஜியத்தில் இருக்கக்கூடாது.
நான் தப்பு என்று நீங்கள் நினைக்கிறீர்கள், என் அரசர் தப்பு என்று நான் நினைக்கின்றேன்
என் அரசரைத்தவிர மற்ற ஒவ்வொருவரும் தம்முடைய வேலையை சரியாக செய்து வருகிறார்கள். அரசருடைய வேலை அவருடைய நாட்டு மக்களின் நலனை கவனிப்பது. ஆனால் அவரோ மக்களின் பிரச்சனைகளை புரிந்து கொள்ள தவறிவிட்டார்.
மாண்புமிகு அரசரே, காலை முதல் மாலை வரை உங்கள் வேலை ஆட்கள் எல்லா வேலையையும் செய்து வருகிறார்கள். நீங்களாக விரும்பி எந்த வேலையும் செய்வதில்லை.


உங்களுடைய
சொந்த வேலையைத் தவிர
நீங்கள் செய்யும் ஒரு
வேலையை சொல்லுங்கள்,
அரசே?
அரசன் பாப்வா  தன்னுடைய தவறை உணர்ந்தான்.


அரசன் கர்ப்பிணி பெண்களுக்கும், முதியவர்களுக்கும் மற்றும்
சிறுவர்களுக்கும் தொந்தரவு செய்யும் சட்டத்தை ரத்து செய்தான்.
அதன் பின் முழு ராஜ்ஜியமும் சந்தோஷமாக வாழ்ந்தது.
முற்றும்.


சகல கலா வல்லவன்


காஞ்சிபுரம் என்ற பழைய ஊரில் வேதாந்த திக்ஷித் என்ற ஓர் அறிஞர் வாழ்ந்து வந்தார்.
வேதாந்த திக்ஷித் கோவில் பூஜாரியாக இருந்ததுடன், அவர் ஒரு பெரிய அறிஞரும் கூட, ஆனால் அவர் மிகவும் ஏழையாக இருந்தார்.
வேதாந்த திக்ஷித் பல துறைகளில் சிறந்து விளங்கினார். அவருடைய அறிவாற்றல் மிக உயர்ந்ததாக இருந்தது.
அவருடைய அறிவைப்பற்றியும், ஆற்றலைப்பற்றியும் அரசனுக்கு தெரிய வந்தது.
நாம் வேதாந்த திக்ஷித் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம், அந்த மாதிரி அறிவாளிகள் நம் சபைக்குத்தேவை.


மந்திரி, அரசனுடைய விருப்பத்தை அவருக்கு தெரிவிக்கிறார்.
ஓ, அரசரின் இச்செய்கையால் நான் கௌரவிக்கப்பட்டேன். தயவு செய்து நான் மன்னிப்பு கேட்டதாக அறிவியுங்கள், ஏனெனில், இதை நான் ஏற்க இயலாது.


ஏன் அப்படி திக்ஷித் ?
இறைவனின் தொண்டில், நான் சந்தோஷமாய் இருக்கின்றேன். தயவு செய்து அரசரிடம் மீண்டும் ஒரு முறை என் தாழ்மையான மன்னிப்புகளை கோருங்கள்.


மந்திரி திரும்பி வந்து, அரசரிடம் செய்தியை சொன்னார்.
நாம் அவருடைய முடிவை மதிக்க வேண்டும். அவர் உண்மையில் மரியாதைக்குரிய மனிதர்.


அங்கே அமர்ந்திருந்த அறிஞர் சிலர் வேதாந்த திக்ஷித் மீது பொறாமை கொண்டிருந்தனர், ஆகவே ...
மன்னா, நாம் திறமைப்போட்டி ஒன்றை நடத்தி, அதில் வேதாந்த திக்ஷித் வென்றால், அவரை கௌரவிக்கலாமே.


சரி தான், திறமைப்போட்டியில் கலந்து கொள்ள வேதாந்த திக்ஷித்துக்கு அழைப்புவிடுங்கள்.
மந்திரி பூஜாரியிடம் சென்று செய்தியை சொன்னார்.
என் திறன்களை நிரூபிக்க நான் தயார், ஆனால் எந்த பட்டத்திற்காகவோ, கௌரவத்திற்காகவோ அல்ல.
அடுத்த நாள் போட்டி தொடங்கியது.
வேதாந்த திக்ஷித் பல துறைகளின் அறிஞர்களையும் தோற்கடித்தார்.


ஒரு ஆள் மக்கள் மத்தியிலிருந்து வந்தான்.
ஐயா, நீங்கள் ஒரு சுவர் கட்ட முடியுமா ?
நிச்சயமாக, எனக்குத் தேவையான கருவிகளை கொடு
அனைவரும் ஆச்சரியப்படும்படி வேதாந்த திக்ஷித் கருவிகளை கொண்டு வேலையை ஆரம்பித்தார்.
அவர் செங்கல்லும் சிமெண்டு கலவையும் கொண்டு நேரான சுவர் எழுப்பினார்.
ஒவ் ...
என்ன திறமை வாய்ந்தவர் !
மற்றொரு ஆள் வந்தார் ..
வேதாந்த திக்ஷித் நீங்கள் ... உம்ம்ம்ம்.... செருப்பு செய்ய முடியுமா ?


ஒவ்வொருவரும்
வியந்தனர்.
நாங்கள் தோல் துண்டுகள்
கொண்டுவரவா, வேதாந்த
திக்ஷித் ?
வேண்டாம், நான்
தோலைத் தொடுவதில்லை,
எனக்கு தேங்காய் நார்
கொண்டுவாருங்கள்.
வேதாந்த திக்ஷித் ஒரு
கயிறை காலுக்கடியில் விட்டு,
அதை ஒரு உருவத்தில் வெட்டி,
வேலையை ஆரம்பித்தார்.
ஒவ், பிரமாதம்.


மக்களுக்கு வேதாந்த திக்ஷித் உடைய திறமைகளைப்பற்றி தெரிய வந்ததும், அவர்கள் அரண்மனையை நோக்கி அவரைப்பார்க்க ஓடினர்.
வேதாந்த திக்ஷித் தவறானவர் என நிரூபிக்க எண்ணிய பொறாமைப்பிடித்த அறிஞர்களில் ஒருவர் முன் வந்தார்.
ii. சரி வேதாந்த திக்ஷித், நான் இப்பொழுது சாதாரண கேள்வியைக்கேட் கிறேன் .... மலம் என்ன சுவை என்று கூற முடியுமா ?
கூடியிருந்த அனைவரும் இந்த கேள்வியை கேட்டு அருவருப்பு அடைந்தனர்.
எந்த விதமான கேள்வி இது ?
மாண்புமிகு மன்னா, வேதாந்த திக்ஷித் சகல கலா வல்லவனாக இருந்தால், இந்த கேள்வி அவருக்கு கஷ்டமாக இருக்காது.
நீங்கள் என்ன சொல்கிறீர் கள் வேதாந்த திக்ஷித் ?
நான் பதில் கொடுக்க முடியும்.


மக்கள் ஒருத்தருக்கொருத்தர் பேசிக்கொண்டனர்.
என்ன ?
ஐக் ... எப்படி ...?
இது உறைப்பாக இருக்கும்.
இதை எப்படி நிரூபிப்பாய் ?
கால்வாயில் பன்றி மலத்தை உண்பதை நீ பார்க்கவில்லை ? மலத்தை உண்ணும் பொழுது, அதன் கண்களிலிருந்து நீர் வரும்.
இங்கே கூடியிருக்கும் அனைவரும் சொல்லுங்கள், எந்த உணவு உண்ணும் பொழுது கண்களில் நீர் வரும் ?
உறைப்பு, காரம்.


உன்னுடைய கேள்விக்கு பதில் கிடைத்து விட்டதா ?
கூடியிருந்த ஒவ்வொருவரும் பூஜாரி உடைய அறிவுக்கூர்மையை பாராட்டினர்.
பிரமாதம் !!!
சபாஷ் !!!
வேதாந்த திக்ஷித், என் நடத்தைக்கு மன்னிக்கவேண்டும் , என் வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.
வேதாந்த திக்ஷித், நீங்கள் அறிவாளி, பெரிய அறிஞர், தயவு செய்து எங்கள் கௌரவத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.
நன்றி மன்னா .
முற்றும்.


அனுலோம் விலோம்



இது அனுலோம் விலோம் என்ற இரு சகோதரர்களின் கதை. இருவரும் சிறந்த உழைப்பாளிகள். அனுலோம் தன் சம்பாத்தியத்தை சேமிப்பான், அதே சமயம் விலோம் மனதால் தாராளமானவன், யாருக்கும் உதவி செய்வான், ஆகவே அவனுடைய சேமிப்புகள் எப்பொழுதும் பூஜ்ஜியமக இருக்கும்.
இருவரும், சன்சலா, ஷகுன் என்ற இரண்டு அழகான பெண்களை மணந்தனர்.
இருவரும் ஒன்றாக இருந்து வந்ததால், அவர்களுடைய சம்பாத்தியம் கூட்டப்பட்டது. ஒரு நாள் ...
அன்பே, உங்கள் சகோதரர் தானம் செய்ய நினைத்தால், அவர் சொந்த பணத்தில் செய்யட்டும். நாம் ஏன் நம் பணத்தை கொடுக்க வேண்டும். இது தொடர்ந்தால், நம்மிடம் சேமிப்பே இருக்காது. நாம் தனியாவதே நல்லது. இல்லையேல் நாம் கஷ்டப்படுவோம்.
அனுலோம் இதை தன் சகோதரனிடம் சொன்னான்.
அனுலோம் உனக்கு எது நல்லதோ அதைச் செய்.


இரு சகோதரர்களும் தனித்தனியாயினர், சொத்தும் பிரிக்கப்பட்டது.
அனுலோம், விலோம் தத்தம் வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அனுலோம் தன் சுய நலத்தில் தொடர்ந்து செயல் பட்டான். ஆகவே சில வருடங்களில் பணக்காரன் ஆனான். அதே சமயம் விலோம் நிறைய தானம் தந்து, ஒன்றும் இல்லாமலிருந்தான்.
ஒரு நாள் அனுலோம் வீட்டிற்கு ஒரு சாது வந்தான்.
தாயே, எனக்கு கொஞ்சம் சோறு போடு ...
சன்சலாவுக்கு கோபம் வந்தது.
நான் எதையும் கொடுப்பதில்லை. நாங்கள் சம்பாதிப்பது உன்னை போன்ற ஆட்களுக்கு ஊட்டுவதற்கு இல்லை. போ இங்கிருந்து, இனி என் வீட்டுப்பக்கம் உன்னை பார்த்தால் இந்த காலணியை சாப்பிட கொடுப்பேன். போய்த்தொலை....
அதே சாது விலோம் உடைய வீட்டிற்கும் வந்தான்.
அம்மா, தாயே, தயவு செய்து எனக்கு சாப்பிட ஏதாவது கொடும்மா.


தானம் கொடுத்து வந்ததினால், விலோம் உடைய குடும்பத்தில் மிக குறைவான உணவே இருந்தது.
ஆண்டவனே, அவருக்குக் கொடுக்க வீட்டில் ஒன்றும் இல்லை.
ஷகுன், அவருக்கு இந்த மோரை கொடு...
ஷகுன் சிறிது புதினா இலை களை வீட்டு தோட்டத்திலிருந்து பறித்து மோருக்குள் இட்டாள்.
நான் சீக்கிரம் வருகிறேன்.
ஷகுன் மோரை சாதுவுக்கு குடிக்க கொடுத்தாள். சாது அதை குடித்தான்.
தாயே, இது மிகவும் ருசியாக உள்ளது, இதில் நீ என்ன போட்டாய்?


ஷகுன் அழுது கொண்டே சொன்னாள்..
மோர் மிகவும் தண்ணீராக இருந்தது, ஆகவே நான் கொஞ்சம் புதினா இலை களை சேர்த்தேன், ஐயா.
அழாதே, இதை வைத்துக்கொள் ...
சாது தம்பதிகளை வாழ்த்தி, சிறிது மோரை பாத்திரத்திலேயே விட்டு விட்டு சென்றான்.
ஷகுன் மீதியிருந்த மோரை செடிகளில் ஊற்றி விட்டாள்.
பாத்திரத்தை கழுவ எடுத்துச்சென்றாள்.... பாத்திரம் முழுக்க உட்பண்டங்கள் இருந்ததைக்கண்டு ஆச்சரியப்பட்டாள்.
அத்தான், எங்கே இருக்கி றீர்கள், இதைப்பாருங்கள்...


அவர்களுக்கு தேவைப்படும் பொழுதெல்லாம், கேட்டவுடன் பாத்திரத்தில் உணவு தயாராக கிடைத்தது.
அன்பே , இது எப்படி முடியும்?
அந்த சாது, நம்மை வாழ்த்தினார் .... இது மாயமாக உள்ளது.
சன்சலா வுக்கு மாய பாத்திரத்தை பற்றி தெரிய வந்தது. தன் கணவனிடம் அந்த சாதுவை அழைத்து வரச்சொன்னாள்.
அனுலோம் சாதுவை சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வருகிறான். சன்சலா இனிமையாக நடித்து, சாதுவுக்கு உணவு பரிமாறுகிறாள்.
சாதுவே! என் முந்தைய நடத்தையை மன்னித்து விடுங்கள்.
சாது அவன் மதிய உணவை முடித்துக்கொண்டான்.
சாது மஹாராஜ்! எங்களை ஆசீர்வதித்து, எதாவது வெகுமதி கொடுங்கள்.



சரி, நீங்கள் என்னுடைய மரக்கட்டை பாதணிகளை வைத்துக்கொள்ளுங்கள்.
அதில் ஏதாவது மாயம் இருக்குமென கருதி, சன்சலா பாதணிகளை பெற்றுக்கொண்டாள்.
சாது அனுலோம் வீட்டிலிருந்து கிளம்பினான்.
இந்த பாதணிகள் மாயமானவைகளாக இருக்கலாம். இதை நான் உள்ளே வைக்கிறேன்.
ஒரு சாது சன்சலா வீட்டிற்கு வருகிறான்.
தாயே, எனக்கு சாப்பிட ஏதாவது கொடு மா...
வீட்டில் ஒன்றும் இல்லை, போ...
சன்சலா கதவை சாத்தி உள்ளே செல்கிறாள். திடீர் என மரக்கட்டை பாதணிகள் பறக்கலாயின, அனுலோம், ச்ன்சலா இருவரையும் உதைத்துக்கொண்டு.


சன்சலா, இது எல்லாம் அந்த சாதுவுக்கு ஒன்றும் கொடுக்காததால்.
போ, அவனை அழைத்து வா.
சாதுவை அழைத்து வந்து அவனுக்கு உணவு அளிக்கின்றனர். பாதணிகள் அவர்களை உதைப்பதை நிறுத்தி, தானாகவே அலமாரிக்குச் சென்றுவிடுகின்றன.
சன்சலா, பாதணிகளை, ஒரு கிணற்றுக்குள் போட்டு, வீடு திரும்புகிறாள். ஆனால் அவளுக்கு முன் பாதணிகள் அதன் இடத்தில் வந்து விடுகின்றன.
வீட்டுக்கு வருபவர்களை எல்லாம் உபசரிக்க வேண்டியிருப்பதால், சன்சலா வருத்தப்பட்டாள்.


ஒரு நாள்.....
அத்தான், அந்த பாத்திரத்தை ஏன் நீங்கள் ஒரு நாளைக்கு இங்கே கொண்டுவரக்கூடாது? அதில் அப்படி என்ன தான் இருக்கிறது என்பதை பார்த்து விடலாமே.
சரி..
அனுலோம் பாத்திரத்தை விலோம் வீட்டிலிருந்து திருடிக்கொண்டு வந்து விடுகிறான்.
விலோம் பல சாதுக்களை மதிய விருந்துக்காக அழைத்திருந்தான். ஆனால், ஷகுன் மாய பாத்திரத்தைக்காணாமல் பயந்து திகைத்தாள்.
ஆண்டவனே, இப்பொழுது நான் என்ன செய்வேன்.
ஷகுன் தோட்டத்துக்கு போய் ஒரு பாத்திரத்தை மணல் கொண்டு நிரப்பினாள்...
அவள் பாத்திரத்தை, அடுப்பில் வைத்தாள்.
ஆண்டவனே, நான் நல்லவள் என்றால், என் வாழ் நாளில் யாருக்கும் தீங்கு செய்யாம லிருந்திருந்தால், இந்த மணலை, உணவாக்கி விடு.


மணலில் சாது குடித்து மிச்சம் வைத்த மோரின் துளிகள் கலந்து இருந்ததால், அந்த மணல் உணவாக மாறியது.
ஆண்டவனே, எங்களை காப்பாற்றி விட்டாய், நன்றி.
தம்பதிகள் சாதுக்களுக்கு உணவை பரிமாறினர், அவர்களின் ஆசீர்வாதமும் பெற்றனர். சில சாதுக்கள் அவர்களுக்கு பரிசுகளும் கொடுத்தனர்.
திருடிய பாத்திரம் இருந்ததால், அனுலோம், சன்சலா பரிசுகள் பெரும் ஆசையில் பல சாதுக்களை விருந்திற்கு அழைத்திருந்தனர்.
சில சாதுக்கள் வீட்டிற்கு வந்தனர்.
ஆண்டவனே, என்ன தப்பாகிவிட்டது. ஒன்றும் நடக்கக்காணோமே. ... சரி, ஷகுன் செய்த மாதிரி செய்யலாம்.
ஆன்டவனே, நான் ஏதும் தவறு செய்யாமலிருந்திருந்தால் இந்த மணலை உணவாக மாற்றி விடு.


அவள் பரிமாரிய பின்னர் உணவாகிவிடும் என
எண்ணி சாதுக்களுக்கு மணலை பரிமாரினாள்.
பசியாக இருக்கும் சாதுக்களுக்கு,
மணலை பரிமாறுகிறீர்களா ?
உங்களுக்கு சாபம் இடுகிறோம். ...
நீங்கள் இருவரும்
பூச்சிகளாக மாறி
விடுவீர்களாக...
அனுலோம், சன்சலா பூச்சிகளாக மாறி விட்டனர்.
விலோம், ஷகுன் இருவரும், இறைவனுடைய சேவையில் வாழ்க்கையை
கழித்து, மகிழ்ச்சியாக இருந்தனர், அதே நேரத்தில் பூச்சிகளாக மாறிய
அனுலோம், சன்சலா இருவரும் இழிந்த இடங்களில் காணப்பட்டனர்.
முடிவு.

# ஜோதிடர்




சோம் நாத் ஒரு ஜோதிடர். அவருக்கு கௌரி என்று ஒரு அழகான மகள் இருந்தாள்.
சோம் நாத் தன் மகளுக்கு ஒரு நல்ல வரன் தேடிக்கொண்டிருந்தார்.
ஒரு நாள் சேடன் என்ற இளைஞன் சோம் நாத் வீட்டிற்கு வந்தான்.
வணக்கம் ஐயா, நான் சேடன், சொந்த தொழில் செய்கிறேன். நான் உங்கள் மகளை மணக்க விரும்புகிறேன்.
மகனே நான் ஜோதிடத்தை பலமாக நம்புகின்றவன். நீ உன் ஜாதகத்தை கொண்டு வந்தால், அதை சரி பார்த்து, முடிவு செய்வேன்.
நிச்சயமாக ஐயா, நான் கொண்டு வருகிறேன்.


அதே நாள், சேடன் சென்ற பிறகு அவனைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தார், சோம் நாத்.
அடுத்த நாள்.
ஐயா, இதோ என் ஜாதகம்
சோம் நாத் ஜாதகத்தை சரி பார்த்து, சேடன் ஒரு நாளும் வாழ்வில் முன்னேற மாட்டான், அப்படியே இருப்பான் என அறிந்து கொண்டார்.
அப்படிப்பட்ட ஆளுக்கு நான் என் மகளை தர முடியாது. ஆனால் எப்படி அவனை திருப்பி அனுப்புவது.


அவர் ஒரு திட்டம் தீட்டினார்.
மகனே, நீ விருத்தி அடைய வேண்டுமானால் உடனே கிழக்கு பிராந்தியத்திற்கு போக வேண்டும். ஆறு மாதங்களில் உன் விதி உன்னை புதிய உயரத்திற்கு தூக்கி விடும்.
ஆறு மாதங்கள் கழித்து வா, என் மகளுடைய கையை உனக்கு தருகிறேன்.
சேடன் அவர் வார்த்தைகளை நம்பி அங்கிருந்து கிளம்பினான்.
சேடன் வரும் முன் நல்ல வரனாக பார்த்து, கௌரிக்கு மணமுடித்து விட வேண்டும்.


ஒரு நாள் கௌரிக்கு ஒரு வரன் வந்தது. சோம் நாத் ஜாதகத்தை படித்து சரி பார்த்தார்.
இவனுடைய ஜாதகம் கௌரிக்கு பொருத்தமாக இருக்கிறது, மணமுடித்துவிட வேண்டியதுதான்.
அன்றிரவு சோம் நாத் உடைய நண்பர் அவரைப்பார்க்க வந்தார்.
விஷ்வ நாத்,கௌரியின் திருமணத்தைப்பற்றி நான் உன்னுடன் பேச வேண்டும். கேடன் உடைய வரன் கௌரிக்கு வந்துள்ளது, நான் ஜாதகத்தைப் பார்த்தேன் மிக பொருத்தமாக இருக்கிறது.
ஆனால் சோம், அவன் இன்னும் வாழ்க்கையில் நிலைத்து நிற்கவில்லை. அவன் தாயுடைய குணம் சரியில்லை.
விஷ்வ நாத், என்னை நம்பு, திருமணத்திற்குப் பிறகு, அவன் அதிர்ஷ்டம் மாறிவிடும். கவலைப்படாதே, எனக்கு நம்பிக்கை இருக்கிறது.
நண்பனின் ஆலோசனைக்கு மாறாக, சோம் நாத், கவ்ரி- கேடன் திருமணத்தை நடத்தி வைத்தார்.


திருமணமான சிலநாட்கள் கழித்து,கௌரியின் மாமியார் அவளுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்து விட்டாள். கணவனும் அவளுக்கு ஆதரவு தரவில்லை.
கேடன் வேலை இல்லாதவன். எப்பொழுதும் பயனற்ற நண்பர்களுடன் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருந்தான்.
கவ்ரி தந்தை வீட்டிற்கு திரும்பி வந்து அவள் வாழ்க்கையைப் பற்றிபுகார் செய்தாள்.
கவலைப்படாதே மகளே, கேடன் சீக்கிரமே நல்லவனாக மாறி விடுவான். அவன் விதிக்கு சிறிது அவகாசம் கொடு. ஒரு நாள், அவன் பணக்காரனாகவும், தகுதியுள்ளவனாகவும் ஆகிவிடுவான்.


அவனுடைய ஜாதகத்தை நான் சரி பார்த்திருக்கிறேன். அவனுக்கு கொஞ்சம் நேரம் கொடு.
கௌரி தயக்கத்துடன் தன் கணவனிடம் சென்றாள்.
ஆறு மாதங்கள் கழித்து சேடன் விருத்தியடைந்து, பணக்காரன் ஆகிவிட்டான்.அவன்கிராமத்திற்கு திரும்பி வந்து, பணக்கார உடையில், சோம் நாத் வீட்டிற்கு சென்றான்.
ஐயா வணக்கம், என்னை தெரியுமா உங்களுக்கு?
ஆமாம், ஆமாம், சேடன் உன்னை எனக்குத்தெரியும். எப்படி இருக்கிறாய். நீ ரொம்ப மாறிவிட்டாயே.


ஆமாம் ஐயா, எல்லாம் உங்களால் தான். நான் உங்கள் அறிவுரைப்படி கிழக்கே பயணித்தேன்.
தொழில் செய்வதற்கு பதிலாக ஒரு ஜமீன்தாரிடம் வேலை செய்தேன்.
ஒரு நாள் ஜமீந்தார் உடைய மகனை பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினேன். அதனால், என் ஜமீன்தார் எனக்கு நிறைய பணமும், சில ஏக்கர் நிலமும் கொடுத்தார்.
இப்படித்தான் நான் பணக்காரன் ஆனேன். ஐயா, நான் இப்பொழுது உங்கள் மகளை மணக்கலாமா ?
நான் வருந்துகிறேன் மகனே, நீ சென்ற பிறகு அவளுக்கு கேடனுடன், திருமணம் ஆகி விட்டது.


சோம் நாத் அனைத்தையும் விளக்கினார், அவர்,
தவறான வழி காட்டியதற்கு மன்னிப்புக்கேட்டார்.
ஐயா, மனம் தளராதீர்கள். உங்கள் ஜாதகத்திற்கு நன்றி. உங்களால் தான் நான் இன்று இந்த நிலையில் இருக்கிறேன். உங்கள் இருவருக்கும் உதவ எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்.
சேடன் தன்னுடைய அந்தஸ்தை பயன்படுத்தி கௌரியின் மாமியாரை
பயமுறுத்தி வைத்தான். கணவன் கேடனுக்கு நன்றாக உழைக்கவும்,
தன் குடும்பத்தை கவனிக்கவும் ஆலோசனை வழங்கினான்.
கௌரி, நான் உனக்கு இரண்டு ஏக்கர் நிலம் தருகிறேன், நீயும் உன் கணவனும் அதில் பயிரிட்டு, விருத்தி அடையுங்கள்.


உன் எல்லா உதவிக்கும் நன்றி மகனே, ஜோதிடம் உனக்கு சாதகமாகவும், எனக்கு பாதகமாகவும் இருந்தது. நாம் அனைவரும் விதியின் கையில் உதவியற்றவராக இருக்கிறோம்.
சரி ஐயா, எனக்கு போக அனுமதி தாருங்கள். ஆனால் எந்த நேரமும் நான் உங்களுக்காக இருக்கிறேன் என்பதை மறக்க வேண்டாம்.
என் ஜோதிடம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், இன்று என் மகள் பெரிய பணக்காரனுடைய மனைவியாக இருந்திருப்பாள்.
சோம் நாத் தன் தவறை உணர்ந்து அன்றிலிருந்து ஜோதிடம் பார்ப்பதை விட்டு விட்டார்.
முற்றும்



**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**
**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**
Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273